**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| SPL.Sessions Case No. | : | 11/2023 (Mother Case S.C.No. 17/2021) | |
| Deposition of witness for | : | Prosecution - Defense | **PW-15** |

| | | | |
|---|---|---|---|
| Name | : சஷ்மிதா | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the 25th day of November 2024.

(எதிரி பிரேம்குமார் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் சின்னாண்டாங்கோவில் நாடார் தெருவில் வசித்து வந்து, என் பெற்றோர் வீட்டில் சுமார் நான்கு வருடங்களாக வசித்து வருகிறேன். என் கணவர் பெயர் கிருஷ்ணமூர்த்தி. எனக்கு 2020 ம் வருடம் ஜனவரி மாதத்தில் திருமணமானது. திருமணத்திற்கு பிறகு நானும், என் கணவரும் தனியாக வசித்து வந்தோம். திருமணத்திற்கு பின்னர், 18.09.2020 அன்று கரூர் - கோவை ரோட்டில் உள்ள எனது மாமியார் இளநீர் கடையில் நானும், என் கணவரும் உட்கார்ந்திருந்தோம். அப்போது என் மைத்துனர் பெயர் பெரியசாமி, என் கொழுந்தன் பிரவீன் ஆகியோரும் கடையில் இருந்தோம். அன்றைய தினம் என் மாமியாரும், மாமனாரும் இளநீர் எடுப்பதற்காக பொள்ளாச்சி சென்றிருந்தனர். அப்போது காலை 8.00 மணியளவில் கோகுல், துரைப்பாண்டி ஆகியோர் என் கணவருக்கு பின்பக்கமாக வந்து என்

கணவரை வெட்டிவிட்டார்கள். ஆஜர் எதிரி பிரேம்குமார் என்பவர் இளநீர் கடைக்கு அருகில் ஹீரோஹோண்டா இருசக்கர வாகனத்தில் நின்றுக்கொண்டிருந்தார். கோகுலும், துரைப்பாண்டியும் என் கணவரை வெட்டிவிட்டு, திரும்பி படியில் இறங்கும்போது, எதிரி பிரேம்குமார் என்பவர் அவர்கள் இருவரையும் பார்த்து, “அவனுக்கு இன்னும் உயிர் இருக்கிறது, அவனை இன்னும் வெட்டுங்கடா" என்று சொன்னார். பின்னர், கோகுலும், துரைப்பாண்டியும் என் கணவரை படியில் இழுத்துப்போட்டு வெட்டிவிட்டு, அவர்கள் இருவரும் மணிகண்டனின் டியூக் இருசக்கர வாகனத்தில் ஏறி சென்றுவிட்டனர். அவர்கள் பின்னாடியே ஆஜர் எதிரி பிரேம்குமாரும் சென்றார். நான் என் கணவரை என் மடியில் தூக்கி வைத்திருந்தேன். அப்போது கூட்டத்தில் இருந்தவர்கள் ஆம்புலன்சிற்கு போன் செய்து வரவழைத்தனர். பக்கத்தில் இருந்த அப்பல்லோ மருத்துவமனைக்கு நான், என் மச்சண்டார் பெரியசாமி, என் கொழுந்தன் பிரவீன் ஆகியோர் என் கணவரை கொண்டு சென்றோம். அப்போது நான் மூன்று மாத கர்ப்பிணியாக இருந்தேன். அப்போது என்னை மருத்துவமனையில் வெளியே நிற்க வைத்துவிட்டு, சிகிச்சை அளிக்கும் இடத்தில் என் மச்சாண்டாரும், கொழுந்தனும் இருந்தார்கள். சிறிதுநேரத்தில் என் கணவர் மிகவும் ஆபத்தான நிலையில் இருக்கிறார் என மருத்துவர்கள் கூறியதாக என் மச்சாண்டார் சொன்னார். பின்னர், கொஞ்சநேரம் கழித்து, இங்கே முடியாது, அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லுமாறு சொன்னார்கள். பின்னர், சிறிது நேரத்தில் என் கணவர் இறந்துவிட்டார் என்றும், அவரை அரசு மருத்தவமனைக்கு கொண்டு செல்லுமாறு கூறிவிட்டனர். நாங்கள் என் கணவரை கரூர், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு சென்றவுடன், முதலில் ஆய்வாளர் வந்து விசாரித்தார். அவரிடம் நடந்ததை சொன்னோம். அவர் எங்களிடம் புகாரை ............

பெற்றுக்கொண்டார். நான் கொடுத்த புகார் அ.சா.ஆ.33. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது. அதன்பிறகு இரண்டு வாரம் கழித்து காவல்துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

சிறையில் வைத்து நீதிபதி முன்பு, கோகுல், துரைப்பாண்டி, மணிகண்டன் ஆகியோரை அடையாளம் காட்டினேன். பிரேம்குமார் என்பவரை கிளைச்சிறையில் வைத்து நீதிபதி முன்பு அடையாளம் காட்டினேன்.

ஆஜர் எதிரி சம்பவத்தின்போது ஹீரோ ஹோண்டா வாகனத்தில் இருந்தவர்.

இவ்வழக்கு சம்மந்தமாக நான் நீதித்துறை நடுவரிடம் வாக்குமூலம் அளித்தேன். என் கணவரை கொன்றுவிட்டார்கள், அவர்களுக்கு தண்டனை வாங்கி கொடுக்க வேண்டும் என்று வாக்குமூலம் கொடுத்தேன். கோகுல், துரைப்பாண்டி என் கணவரை வெட்டினார்கள் என்றும், மணிகண்டன் என்பவர் அவர்கள் இரவரையும் வண்டியில் கூட்டிசென்றார் என்றும், பிரேம்குமார் என்பவர் இன்னும் அவனுக்கு உயிர் இருக்குது, இழுத்துபோட்டு வெட்டுங்கடா என்று கூறினார் என்றும் சொன்னேன். என்னிடம் காட்டடப்படுவது நீதித்துறை நடுவரிடம் நான் அளித்த முந்தைய வாக்குமூலம். அது அ.சா.ஆ.34.

என் கணவருக்கு இடது கை முழுவதிலும் வெட்டப்பட்டது. துரைப்பாண்டி என்பவர் வலதுபக்க கழுத்தில் வெட்டினார்.

17.09.2020 அன்று இரவு கோகுல், துரைப்பாண்டி, பிரேம், மணிகண்டன் ஆகியோருக்கும், என் கணவருக்கும் பிரச்சினை ஏற்பட்டது. அதில் பிரேம் என்பவருக்கு தலையில் அடிப்பட்டுவிட்டது. அதன்பிறகு அன்றே சமாதானம் பேசிமுடித்து, என் கணவர் வீட்டிற்கு வந்து, என்னிடம் ....

பிரச்சினை நடந்தது பற்றி சொன்னார். மறுநாள் காலையில் வழக்கு சம்பவம் நடந்தது.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலையாகி, மூத்த வழக்கறிஞர் வேறு நீதிமன்றத்தில் ஆஜராகியிருப்பதால், குறுக்குவிசாரணை ஒத்தி வைக்க கோரினார். குறுக்கு விசாரணை இல்லை.

ஒம்/- ஆர்.சண்முகசுந்தரம்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | |
|---|---|---|
| SPL.Sessions Case No. | : | 11/2023 (Mother Case S.C.No. 17/2021) |
| Deposition of witness for | : | Prosecution - **PW-16**<br>Defense |

| | | | |
|---|---|---|---|
| Name | : பெரியசாமி | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the 25th day of November 2024.

**(எதிரி பிரேம்குமார் ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் சின்னாண்டாங்கோவிலில் வசித்து வந்து, கரும்பு ஜூஸ் கடை நடத்தி வருகிறேன். அ.சா.1 சஷ்மிதா இறந்துபோன என் தம்பி கிருஷ்ணமூர்த்தியின் மனைவி. நான் இந்து, பள்ளர் சாதியை சேர்ந்தவன். கடந்த 18.09.2020 அன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 – 10.00 மணியளவில் எங்கள் இளநீர் கடையில் நான், என் தம்பி கிருஷ்ணமூர்த்தி, அவரது மனைவி சஷ்மிதா, என் மற்றொரு தம்பி பிரவீன் ஆகியோர் இருந்தோம். அப்போது மூன்று நபர்கள் கோகுல், துரைப்பாண்டி, மணிகண்டன் ஆகியோர் டியூக் இருசக்கர வாகனத்தில் வந்தனர். அவர்களில் மணிகண்டன் என்பவர் வண்டியிலேயே உட்கார்ந்திருந்தார். கோகுலும், துரைப்பாண்டியும் வண்டியிலிருந்து இறங்கி வந்து, என் தம்பியை அருவாளால் வெட்டினார்கள். வெட்டும்போது, நானும், என் தம்பி பிரவீன்

என்பவரும் தடுக்க சென்றோம். குறுக்கே வந்தால் வெட்டிவிடுவோம் என மிரட்டினார்கள். அதனால் பயந்துபோய் நாங்கள் கிட்டே போகவில்லை. எங்கள் இளநீர்கடையில் வைத்து கோகுல் என்பவர் என் தம்பியை இடது கழுத்தில் அருவாளால் வெட்டினார். துரைப்பாண்டி என்பவர் என் தம்பியின் வலது கழுத்திலும், தலையிலும் வெட்டினார். பின்னர், இருவரும் மாறி மாறி என் தம்பியை வெட்டினார்கள். என் தம்பி உயிருக்கு போராடிய நிலையில் இருந்தார். பிரேம்குமார் என்பவர் சம்பவம் நடந்தபோது அந்த இடத்தில் இருசக்கர வாகனத்தில் தனியாக நின்றுக்கொண்டிருந்தார். பிரேம்குமார், அவன் இன்னும் சாகவில்லை, இன்னும் வெட்டுங்கள் என்று சொன்னார். அவர் சொன்னவுடன் என் தம்பியை மாறி மாறி வெட்டினார்கள். அதன்பிறகு, அங்கிருந்து பைக்கில் சென்றுவிட்டார்கள். நாங்கள் அவர்களை பிடிப்பதற்கு, பைக்கை எடுத்து விரட்டினோம். பிடிக்க முடியவில்லை.

கூட்டத்தில் இருந்தவர்கள் ஆம்புலன்சிற்கு போன் செய்து வரவழைத்தனர். நானும், என் தம்பி பிரவீனும், கிருஷ்ணமூர்த்தியை ஆம்புலன்சில் ஏற்றினோம். நான் ஆம்புலன்சிற்கு முன்பாக பைக்கை எடுத்துக்கொண்டு, அப்பல்லோ மருத்துவமனைக்கு சென்றேன். ஆம்புலன்சில் என் தம்பி கிருஷ்ணமூர்த்தியை ஏற்றிக்கொண்டு, அவரது மனைவி சஷ்மிதா வந்தார். அப்பல்லோ மருத்துவமனையில் என் தம்பியை அனுமதித்து, அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சையளித்தனர். சிறிதுநேரத்தில், என் தம்பி இறந்துவிட்டார். வெளியே வந்து, நான் என் தம்பி மனைவியிடம் அவர் இறந்த விவரத்தை சொன்னேன். பின்னர், என் தம்பியின் பிரேதத்தை கரூர், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக கொண்டு சென்றோம். அங்கு வைத்து போலீசார் என்னை விசாரித்தனர்.

வழக்கு சம்மந்தமாக நீதித்துறை நடுவரிடம் நான் வாக்குமூலம் கொடுத்தேன். அந்த வாக்குமூலத்தில், என் தம்பி கிருஷ்ணமூர்த்தியை கோகுலகிருஷ்ணனும், துரைப்பாண்டியும் வெட்டினார்கள் என்று சொன்னேன். மணி என்பவர் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தார் என்று சொன்னேன். மற்றொரு இருசக்கர வாகனத்தில் ஆஜர் எதிரி பிரேம்குமார் அங்கு வந்தார் என்றும் சொன்னேன். என் தம்பியை மேலும் வெட்டுங்கள் என்று கூறினார் என்றும் சொன்னேன். நான் அளித்த வாக்குமூலம் என்னிடம் காட்டப்படுவது. அது அ.சா.ஆ.35.

எதிரி பிரேம்குமார் என்பவர் வந்த இருசக்கர வாகனம் நீதிமன்றத்தில் உள்ளது. அது Hero Honda CD Delux ஆகும். அது சா.பொ.1.

கோகுலகிருஷ்ணன், துரைப்பாண்டி ஆகியோர் என் தம்பியை வெட்டிய அருவாள்கள் நீதிமன்றத்தில் உள்ளது. அது சா.பொ.2 மற்றும் 3.

மணிகண்டன், துரைப்பாண்டி, கோகுல் ஆகியோர் வந்த டியூக் இருசக்கர வாகனம் நீதிமன்றத்தில் உள்ளது. அது சா.பொ.4.

சம்பவத்திற்கு முந்தைய நாள் என் தம்பி கிருஷ்ணமூர்த்திக்கும், எதிரி பிரேம்குமாருக்கும் சண்டை வந்தது. இருவரும் அடித்துக்கொண்டனர். அதன்காரணமாக மறுநாள் வழக்கு சம்பவம் நடந்தது.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலையாகி, மூத்த வழக்கறிஞர் வேறு நீதிமன்றத்தில் ஆஜராகியிருப்பதால், குறுக்குவிசாரணை ஒத்தி வைக்க கோரினார். குறுக்கு விசாரணை இல்லை.

ஒம்/- ஆர்.சண்முகசுந்தரம்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | |
|---|---|---|
| SPL.Sessions Case No. | : | 11/2023 (Mother Case S.C.No. 17/2021) |
| Deposition of witness for | : | Prosecution - **PW-17** |
| | | Defense |

Name : பிரவீன் (எ) பன்னீர்செல்வம் Father's Name :

| | | | |
|---|---|---|---|
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the 25th day of November 2024.

(எதிரி பிரேம்குமார் ஆஜர்)

<u>முதல் விசாரணை</u>

நான் சின்னாண்டாங்கோவிலில் வசித்து வந்து, ஆஸ்பெட்டாஸ் கூரை போடும் வேலைக்கு சென்று வருகிறேன். அ.சா.2 பெரியசாமி என் அண்ணன். இவ்வழக்கில் இறந்துபோன கிருஷ்ணமூர்த்தி என் மற்றொரு அண்ணன். அ.சா.1 சஷ்மிதா என் அண்ணன் கிருஷ்ணமூர்த்தியின் மனைவி.

கடந்த 17.09.2020 அன்று இரவு நானும், என் நண்பர் கார்த்திக் என்பவரும் இளநீர் கடையை பார்த்துவிட்டு செல்வதற்காக கரூருக்கு வந்திருந்தோம். அப்போது ஸடீச்சர்ஸ் காலனியில் வைத்து எதிரி பிரேம்குமார், கோகுல், துரைப்பாண்டி, மணிகண்டன் இன்னும் நிறைய பேர் என்னை ஊருக்குள் வந்து அடித்துவிட்டான், அவனை வெட்டியே ஆக வேண்டும் என்று பேசிக்கொண்டிருந்தார்கள். நான் அதை பார்த்துவிட்டு, ……

எதோ பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்று நினைத்து சாதாரணமாக வந்துவிட்டேன்.

அடுத்தநாள் காலையில் என் அம்மா இளநீர் லோடு வாங்குவதற்காக வெளியே போயிருந்தார். அன்று என் அண்ணன் கிருஷ்ணமூர்த்தியும், அவரது மனைவியும் இளநீர் கடையை பார்த்துக்கொண்டனர். அதற்கு பின்னர் நானும், என் அண்ணன் பெரியசாமியும் கடையை பார்த்துவிட்டு வரலாம் என்று சென்றோம். நாங்கள் சென்றபோது, கோகுல், மணிகண்டன், துரைப்பாண்டி ஆகியோர் ஒரு வண்டியில் வந்தனர். பிரேம்குமார் என்பவர் மற்றொரு வண்டியில் வந்தார். பிரேம்குமார் என்பவர் நீதிமன்றத்தில் உள்ள ஆஜர் எதிரி. கோகுலும், துரைப்பாண்டியும் வண்டியிலிருந்து இறங்கி வந்து, என் அண்ணன் கிருஷ்ணமூர்த்தியை அருவாளால் வெட்டினார்கள். தடுக்க சென்ற எங்களையும் வெட்டிவிடுவோம் என மிரட்டினார்கள். வெட்டியவுடன் வண்டியில் ஏறச்சென்றார்கள். அப்போது கிருஷ்ணமூர்த்தி நல்லா சாகவில்லை, சாகும்வரை வெட்டுங்கடா என்று எதிரி பிரேம்குமார் சொன்னார். பின்னர், கீழே வந்து கோகுலும், துரைப்பாண்டியும், என் அண்ணன் கிருஷ்ணமூர்த்தியை மீண்டும் வெட்டினார்கள். அதன்பிறகு வண்டியில் சென்றுவிட்டார்கள்.

அதன்பிறகு ஆம்புலன்சிற்கு யாரோ போன் செய்தார்கள். ஆம்புலன்ஸ் வந்தவுடன் என் அண்ணன் கிருஷ்ணமூர்த்தியை ஆம்புலன்சில் ஏற்றிச்சென்றார்கள். நானும், என் அண்ணன் கிருஷ்ணமூர்த்தியும் இருசக்கர வாகனத்தில் சென்றோம். ஆம்புலன்சில் வேறு யார் சென்றார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. அங்கு சென்ற சிறிதுநேரத்தில் என் அண்ணன் கிருஷ்ணமூர்த்தி இறந்துவிட்டார் என சொன்னார்கள். பின்னர் என் அண்ணன் பிரேதத்தை கரூர், அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு

வந்த போலீசாரிடம், என் அண்ணி புகார் கொடுத்தார். போலீசார் எங்களை விசாரித்தார்கள்.

என் அண்ணனின் பின்பக்க தலை, முகம், வலது கை, முகத்தில் வாய்க்கு அருகில், இடது கை மணிக்கட்டு ஆகிய இடங்களில் வெட்டினார்கள்.

எதிரிகள் என் அண்ணனை வெட்டிய அருவாள் நீதிமன்றத்தில் உள்ள சா.பொ.2 மற்றும் 3.

கோகுல், துரைப்பாண்டி, மணிகண்டன் ஆகிய மூவரும் வெள்ளை நிற டியூக் இருசக்கர வாகனத்தில் வந்தனர். அந்த இருசக்கர வாகனம் நீதிமன்றத்தில் உள்ள சா.பொ.4.

பிரேம்குமார் கருப்புநிற ஹோண்டா வாகனத்தில் வந்தார். அந்த வாகனம் நீதிமன்றத்தில் உள்ள சா.பொ.1.

இவ்வழக்கு சம்மந்தமாக நீதித்துறை நடுவரிடமும் வாக்குமூலம் அளித்தேன். அந்த வாக்குமூலத்தில், பொங்கலுக்கு என் அண்ணனுக்கும், பிரேம்குமாருக்கும் பிரச்சினை இருந்தது என்றும், அதன்காரணமாக என் அண்ணனை வெட்டினார்கள் என்றும் சொன்னேன். என்னிடம் காட்டப்படுவது நான் அளித்த முந்தைய வாக்குமூலம் அது அ.சா.ஆ.36.

இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலையாகி, மூத்த வழக்கறிஞர் வேறு நீதிமன்றத்தில் ஆஜராகியிருப்பதால், குறுக்குவிசாரணை ஒத்தி வைக்க கோரினார். குறுக்கு விசாரணை இல்லை.

ஒம்/- ஆர்.சண்முகசுந்தரம்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| SPL.Sessions Case No. | : | 11/2023 (Mother Case S.C.No. 17/2021) | |
| Deposition of witness for | : | Prosecution - | **PW-18** |
| | | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : அஸ்வினி | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the 25th day of November 2024.

(எதிரி பிரேம்குமார் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் சின்னாண்டாங்கோவிலில் வசித்து வந்து, நர்சிங் படித்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன கிருஷ்ணமூர்த்தி என் அக்கா கணவர். அ.சா.1 சஷ்மிதா என் அக்கா.

நான் கல்லூரிக்கு செல்வதற்கு செலவிற்கு பணம் வாங்குவதற்காக, 18 ம் தேதி 2020 ம் வருடம் இளநீர் கடைக்கு சென்றேன். நான் என் அக்காவிடம் பணம் வாங்கிவிட்டு, திரும்பி வரும்போது, பிரேம்மஹால் ரோட்டில் காவியாரமேஷ் என்பவரும், VKG பெட்ரோல் பங்க் அருகில் கேசவன் என்பவரும் நின்றுக்கொண்டிருந்தார்கள். நான் அவர்களை பார்த்துவிட்டு, எதற்காக நிற்கிறார்கள் என்று தெரியாமல், கல்லூரிக்கு சென்றுவிட்டேன். பின்னர், கால்மணி நேரத்தில் என் அக்கா எனக்கு போன் செய்து, மாமாவை வெட்டிவிட்டார்கள், அப்பல்லோ மருத்துவமனைக்கு வா என்று சொன்னார்.

நான் உடனடியாக கல்லூரியிலிருந்து, மருத்துவமனைக்கு சென்றேன். நான் அங்கு சென்று பார்த்தபோது, என் மாமா இறந்துவிட்டார் என்று சொன்னார்கள். நான் என் அக்காவிடம், கேசவனும், காவியாரமேஷ்-ம் அங்கு நின்றுக்கொண்டிருந்த விவரத்தை சொன்னேன். என் மாமாவை வெட்டுவதற்காகத்தான் அங்கு நின்றுக்கொண்டிருந்திருக்கிறார்கள் என்று என் அக்காவிடம் சொன்னேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

இது சம்மந்தமாக நான் நீதித்துறை நடுவரிடம் வாக்குமூலம் கொடுத்தேன். அந்த வாக்குமூலத்தில், பிரேம் மஹால் ரோட்டில் காவியாரமேஷ்ம், பெட்ரோல் பங்க் அருகில் கேசவனும் நின்றுக்கொண்டிருந்தார்கள் என்றும், நான் அவர்களை பார்த்துக்கொண்டே கல்லூரிக்கு சென்றேன் என்றும் சொன்னேன். நான் அளித்த வாக்குமூலம் என்னிடம் காட்டப்படுவது. அது அ.சா.ஆ.37.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலையாகி, மூத்த வழக்கறிஞர் வேறு நீதிமன்றத்தில் ஆஜராகியிருப்பதால், குறுக்குவிசாரணை ஒத்தி வைக்க கோரினார். குறுக்கு விசாரணை இல்லை.

ஒம்/-ஆர்.சண்முகசுந்தரம்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | |
|---|---|---|
| SPL.Sessions Case No. | : | 11/2023 (Mother Case S.C.No. 17/2021) |
| Deposition of witness for | : | Prosecution - **PW-19**<br>Defense |

| | | | |
|---|---|---|---|
| Name | : குணசேகரன் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the 25th day of November 2024.

(எதிரி பிரேம்குமார் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் சின்னாண்டாங்கோவிலில் வசித்து வந்து, பைபாஸ் ரோட்டில் இளநீர் கடை வைத்துள்ளேன். எனக்கு மூன்று மகன்கள், ஒரு மகள். இவ்வழக்கு சம்பவத்தில் இறந்துபோன கிருஷ்ணமூர்த்தி என் இரண்டாவது மகன். என் மகன் இறப்பதற்கு முந்தைய நாள் கோகுல், பிரேம், துரைப்பாண்டி, மணிகண்டன் ஆகியோருக்கும், என் மகன் கிருஷ்ணமூர்த்திக்கும் சண்டை வந்தது என்று என் மகன் கிருஷ்ணமூர்த்தி அவர் இறப்பதற்கு முந்தையநாள் என்னிடம் சொன்னார். மறுநாள் நான் என் மகன் கிருஷ்ணமூர்த்தியையும், அவரது மனைவியையும் இளநீர் கடையில் விட்டுவிட்டு, நானும், என் மனைவியும் பொள்ளாச்சிக்கு சென்றோம். நாங்கள் பாதி வழி சென்றவுடன் என் மருமகள் போன் செய்து, சம்பவம் பற்றி

சொன்னவுடன் திரும்பி வந்துவிட்டோம். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலையாகி, மூத்த வழக்கறிஞர் வேறு நீதிமன்றத்தில் ஆஜராகியிருப்பதால், குறுக்குவிசாரணை ஒத்தி வைக்க கோரினார். குறுக்கு விசாரணை இல்லை.

ஒம்/- ஆர்.சண்முகசுந்தரம்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | |
|---|---|---|
| SPL.Sessions Case No. | : | 11/2023 (Mother Case S.C.No. 17/2021) |
| Deposition of witness for | : | Prosecution - **PW-20** |
| | | Defense |

| | | | |
|---|---|---|---|
| Name | : ரஞ்சிதம் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the 25th day of November 2024.

(எதிரி பிரேம்குமார் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் சின்னாண்டாங்கோவிலில் வசித்து வந்து, இளநீர் வியாபாரம் செய்கிறேன். அ.சா.19 என் கணவர். அ.சா.16, 17 என் மகன்கள். அ.சா.15 என் மகன் கிருஷ்ணமூர்த்தியின் மனைவி.

சுமார் நான்கு வருடங்களுக்கு முன்பு, நானும், என் கணவரும் இளநீர் வாங்குவதற்காக பொள்ளாச்சிக்கு சென்றோம். இளநீர் கடையில் என் மருமகளும், என் மகன் கிருஷ்ணமூர்த்தியும் இருந்தனர். என் மருமகள் எனக்கு போன் செய்து, சம்பவம் பற்றி கூறினார்.

என் மகன் இறப்பதற்கு முந்தைய நாள் பிரச்சினை என்று என் மகன் கிருஷ்ணமூர்த்தி என்னிடம் சொன்னார்.

இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலையாகி, மூத்த வழக்கறிஞர் வேறு நீதிமன்றத்தில் ஆஜராகியிருப்பதால், குறுக்குவிசாரணை ஒத்தி வைக்க கோரினார். குறுக்கு விசாரணை இல்லை.

ஒம்/- ஆர்.சண்முகசுந்தரம்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| SPL.Sessions Case No. | : | 11/2023 (Mother Case S.C.No. 17/2021) | |
| Deposition of witness for | : | Prosecution - | **PW-21** |
| | | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : கோவிந்தராஜ் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the 25th day of November 2024.

(எதிரி பிரேம்குமார் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் சின்னாண்டாங்கோவிலில் வசித்து வந்து, திருக்காம்புலியூர் சுடுகாட்டிற்கு அருகில் இளநீர் கடை வைத்துள்ளேன். அ.சா.20ம் என் கடைக்கு அருகில் இளநீர் கடை வைத்துள்ளார். அ.சா.20ன் மகன் கிருஷ்ணமூர்த்தியை எனக்கு தெரியும். இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. கிருஷ்ணமூர்த்தி எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியாது.

மேற்படி சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி, குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரி, அனுமதியின்பேரில் குறுக்கு விசாரணை

நான் இந்து, தேவேந்திரகுல வேளாளர் சாதியை சேர்ந்தவர். எனக்கு ஒரு மகன். ஒரு மகள் உள்ளார். என் மகன் பெயர் நந்தக்குமார். அவர் சாதி

சங்கத்தில் தலைவராக உள்ளாரா என்று எனக்கு தெரியாது. கோகுல் என்பவரை எனக்கு தெரியாது.

போலீசார் என்னை விசாரித்தபோது, கடந்த 18.09.2020 அன்று காலை 9.00 மணிக்கு நானும், என் மனைவியும் கடையில் இருந்தோம் என்றும், எங்கள் கடைக்கு மேல்புறத்தில் பெரியசாமியும், கிருஷ்ணமூர்த்தி, அவர் மனைவி சஷ்மிதா ஆகியோர் அவர்கள் கடையில் இருந்தனர் என்றம், பின்னால் பெயர் கேட்டு தெரிந்துக்கொண்ட கோகுலகிருஷ்ணன், பாண்டி (எ) துரைப்பாண்டி ஆகியோர் வந்து, கிருஷ்ணமூர்த்தியின் வலது காதின் பின்புறம் கோகுல் வெட்டினார் என்றும், பாண்டி (எ) துரைப்பாண்டி அவர் வைத்திருந்த அருவாளால் கிருஷ்ணமூர்த்தியின் உச்சந்தலையில் வெட்டினார் என்றும், பின்னர் இருவரும் மாறி மாறி கிருஷ்ணமூர்த்தியை வெட்டினார்கள் என்றும், கிருஷ்ணமூர்த்தி இரத்தக்காயத்துடன் கீழே விழுந்துவிட்டார் என்றும், பின்னர் பிரேம்குமாரும், மணிகண்டனும் இன்னும் உயிர் இருக்குடா, நல்லா வெட்டி சாவடிங்கடா என்று சொன்னபோது, நானும், துரைசாமியும், கிருஷ்ணமூர்த்தியின் மனைவியும், என் மனைவியும், பிரவீனும், தடுக்க சென்றபோது, எதிரிகள் கையில் வைத்திருந்த அருவாள்களை காட்டி கிட்டே வந்தால் உங்களை வெட்டிவிடுவோம் என்று மிரட்டிவிட்டு, இருசக்கர வாகனத்தை மணிகண்டன் ஓட்ட அவருக்கு பின்னால் கோகுலும், துரைப்பாண்டியும் சென்றுவிட்டனர் என்றும், அவர்களுக்கு பின்னால் பிரேம்குமார் ஒரு இருசக்கர வாகனத்தில் சென்றார் என்றும், காயம்பட்டிருந்த கிருஷ்ணமூர்த்தி தனியார் ஆம்புலன்ஸ் மூலம் அப்பல்லோ மருத்துவமனை கொண்டு சென்றார்கள் என்றும், கிருஷ்ணமூர்த்தி 10.50 மணிக்கு இறந்துவிட்டார்எ ன்று தகவல் தெரிந்துக்கொண்டேன் என்றும் சொல்லிவிட்டு, தற்போது எதிரி கோகுல் என் சாதியை சேர்ந்தவர் என்ற ......

காரணத்தினாலும், என் மகன் நந்தக்குமார் தேவேந்திரகுல மக்கள் இயக்கத்தை சேர்ந்தவர் என்றும், என் மகன் கேட்டுக்கொண்டதற்காக எதிரிகளை காப்பாற்றுவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை என தெரிவித்தார்.

ஒம்/- ஆர்.சண்முகசுந்தரம்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | |
|---|---|---|
| SPL.Sessions Case No. | : | 11/2023 (Mother Case S.C.No. 17/2021) |
| Deposition of witness for | : | Prosecution - **PW-22**<br>Defense |

| | | | |
|---|---|---|---|
| Name | : மணியம்மாள் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the 25th day of November 2024.

(எதிரி பிரேம்குமார் ஆஜர்)

<u>முதல் விசாரணை</u>

நான் திருக்காம்புலியூரில் வசித்து வந்து, இளநீர் வியாபாரம் செய்கிறேன். அ.சா.21 கோவிந்தராஜ் என் கணவர். அ.சா.19 குணசேகரன் என் கடைக்கு அருகில் இளநீர் கடை வைத்துள்ளார். அவரது மகன் கிருஷ்ணமூர்த்தியை எனக்கு தெரியாது. அவரை நான் பார்த்ததில்லை. வழககு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. சம்பவத்தை நான் பார்க்கவில்லை.

மேற்சொன்ன சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை

போலீசார் என்னை விசாரித்தபோது, கடந்த 18.09.2020 அன்று காலை 9.00 மணிக்கு நானும், என் கணவரும் கடையில் இருந்தோம் என்றும், எங்கள் கடைக்கு மேல்புறத்தில் பெரியசாமியும், கிருஷ்ணமூர்த்தி, அவர் மனைவி .....

சஷ்மிதா ஆகியோர் அவர்கள் கடையில் இருந்தனர் என்றும், பின்னால் பெயர் கேட்டு தெரிந்துக்கொண்ட கோகுலகிருஷ்ணன், பாண்டி (எ) துரைப்பாண்டி ஆகியோர் வந்து, கிருஷ்ணமூர்த்தியின் வலது காதின் பின்புறம் கோகுல் வெட்டினார் என்றும், பாண்டி (எ) துரைப்பாண்டி அவர் வைத்திருந்த அருவாளால் கிருஷ்ணமூர்த்தியின் உச்சந்தலையில் வெட்டினார் என்றும், பின்னர் இருவரும் மாறி மாறி கிருஷ்ணமூர்த்தியை வெட்டினார்கள் என்றும், கிருஷ்ணமூர்த்தி இரத்தக்காயத்துடன் கீழே விழுந்துவிட்டார் என்றும், பின்னர் பிரேம்குமாரும், மணிகண்டனும் இன்னும் உயிர் இருக்குடா, நல்லா வெட்டி சாவடிங்கடா என்று சொன்னபோது, நானும், துரைசாமியும், கிருஷ்ணமூர்த்தியின் மனைவியும், என் கணவரும், பிரவீனும், தடுக்க சென்றபோது, எதிரிகள் கையில் வைத்திருந்த அருவாள்களை காட்டி கிட்டே வந்தால் உங்களை வெட்டிவிடுவோம் என்று மிரட்டிவிட்டு, இருசக்கர வாகனத்தை மணிகண்டன் ஓட்ட அவருக்கு பின்னால் கோகுலும், துரைப்பாண்டியும் சென்றுவிட்டனர் என்றும், அவர்களுக்கு பின்னால் பிரேம்குமார் ஒரு இருசக்கர வாகனத்தில் சென்றார் என்றும், காயம்பட்டிருந்த கிருஷ்ணமூர்த்தி தனியார் ஆம்புலன்ஸ் மூலம் அப்பல்லோ மருத்துவமனை கொண்டு சென்றார்கள் என்றும், கிருஷ்ணமூர்த்தி 10.50 மணிக்கு இறந்துவிட்டார் என்று தகவல் தெரிந்துக்கொண்டேன் என்றும் சொல்லிவிட்டு, தற்போது எதிரி கோகுல் என் சாதியை சேர்ந்தவர் என்ற காரணத்தினாலும், என் மகன் நந்தக்குமார் தேவேந்திரகுல மக்கள் இயக்கத்தை சேர்ந்தவர் என்றும், என் மகன் கேட்டுக்கொண்டதற்காக எதிரிகளை காப்பாற்றுவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**
இல்லை என தெரிவித்தார்.

ஒம்/- ஆர்.சண்முகசுந்தரம்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்

**<u>DEPOSITION OF WITNESS</u>**

**<u>(Chapter XXIII Code of Criminal Procedure)</u>**

**<u>IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.</u>**

| | | |
|---|---|---|
| SPL.Sessions Case No. | : | 11/2023 (Mother Case S.C.No. 17/2021) |
| Deposition of witness for | : | Prosecution - **PW-23**<br>Defense |

| | | | |
|---|---|---|---|
| Name | : தீபக் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the 25th day of November 2024.

(எதிரி பிரேம்குமார் ஆஜர்)

<u>முதல் விசாரணை</u>

நான் திருக்காம்புலியூரில் வசித்து வந்து, தனியார் நிதிநிறுவனத்தில் வேலை பார்க்கிறேன். சாட்சி காமராஜரை எனக்கு தெரியும். 18ம் தேதி மதியம் 12.00 மணியளவில் நான் வீட்டிற்கு சாப்பிடுவதற்காக சென்றுக்கொண்டிருந்தேன். அப்போது டான்சி தொழிற்சாலைக்கு எதிர்பக்கத்தில் சம்பவ இடத்தில் கூட்டமாக நின்றுக்கொண்டிருந்தார்கள். அங்கு காமராஜரும் நின்றுக்கொண்டிருந்தார். போலீசார் அந்த இடத்தை வரைபடம் வரைந்து, மகஜர் தயாரித்தனர். என்னிடமும், காமராஜரிடமும் மகஜரில் கையெழுத்து கேட்டனர். நாங்கள் பார்வை மகஜரில் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படுவது அந்த பார்வை மகஜர். அது அ.சா.ஆ.38.

பின்னர் போலீசார் இரத்தக்கறை படிந்த ஓடு, இரத்தக்கறை படியாத ஓடு ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார்கள். அதிலும் நாங்கள் சாட்சி கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் என்னிடம் காட்டப்படுவது. அது அ.சா.ஆ.39. போலீசார் கைப்பற்றிய இரத்தக்கறை படிந்த டைல்ஸ் நீதிமன்றத்தில் உள்ளது. அது சா.பொ.5. இரத்தக்கறை படியாத டைல்ஸ் துண்டுகள் நீதிமன்றத்தில் உள்ளது. அது சா.பொ.6.

இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலையாகி, மூத்த வழக்கறிஞர் வேறு நீதிமன்றத்தில் ஆஜராகியிருப்பதால், குறுக்குவிசாரணை ஒத்தி வைக்க கோரினார். குறுக்கு விசாரணை இல்லை.

ஒம்/- ஆர்.சண்முகசுந்தரம்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்